சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 13.10.2025

பி.வா.சா.1 – பாலமுருகன் S/o கண்ணன்

O.S. No.141/2023

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

நான் வெல்டிங் பிராஜக்ட் வேலை செய்து வருகிறேன். கடந்த 10 ஆண்டுகளாக நான் மேற்படி தொழிலை செய்து வருகிறேன். நான் படிக்கும்போதே சிறுசிறு வேலைகளை செய்து வந்தேன். வழக்கு சொத்து என் அம்மா K. பொன்னழகு 1995ம் வருடம் சுயசம்பாத்தியத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். வாதி என்னுடைய உடன்பிறந்த அக்கா ஆவார். என் தாயார் கடந்த 2000மாவது ஆண்டு வழக்கு சொத்தை பொறுத்து என் பெயருக்கும், என் அக்காவான வாதி பெயருக்கும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என் தந்தை எனக்கு 5வயது இருக்கும் போதே என் தாயாரையும் எங்களையும் விட்டுவிட்டு வெளியே சென்று வேறு திருமணம் செய்துவிட்டார். என் அக்காவிற்கு நான் தான் திருமணம் முடித்து கொடுத்தேன் என்றம் அதற்கு நகை செலவுகளை நான் செய்தேன் என்றும் அதற்கு ஈடாக என் அக்கா வழக்கு சொத்தில் தன் உரிமையை விட்டுகொடுத்துவிட்டார் என்று கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணமாக இல்லை. ஆனால் பேசப்பட்டது தான். வாதி நித்யாவிற்கு திருமணம் ஆகும் போது எனக்கு 25 வயதிருக்கும் நான் அப்போது திருப்பூரில் வேலை செய்து வந்தேன். வாதிக்கு 10.12.2014 அன்று திருமணம் நடந்தது. சாட்சியிடம்

பி.சா.ஆ.1 ஆவணம் காட்டப்பட்டு, அதை தான் சாட்சி தங்கநகை எடுத்து போட்டதற்கு ஆதாரம் என்று குறிப்பிடுகிறார். மேற்படி ஆவணத்தில் நகைகடையின் பெயரோ, பில்லில் உள்ள சீலோ, கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். எனக்கு 2012ம் ஆண்டு எனக்கு வயது 19 என்றால் சரிதான். 19 வயதில் எனக்கு எந்த வருமானமும் இருக்க வாய்ப்பில்லை என்றும் 2014ம் ஆண்டு திருமணம் நடக்கும் போது எனக்கு வருமானம் இல்லை என்றம் ஆதலால் வாதிக்கு திருமணசெலவிற்கு நகைகள் போட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஜெயவேல் பாத்திரகடையில் பாத்திரங்கள் வாங்கும் பில்கள் காட்டப்பட்டு அதில் கையெழுத்தோ, கடைசீலோ இல்ல என்று குறிப்பிடப்பட்டது சாட்சி அதை பார்வையிட்டு சரிதான் என்று குறிப்பிடுகிறார். வாதிக்கு கொடுக்கவேண்டிய பாகத்தை மறைத்து, பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து வழக்கை எதிர்கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு சொத்தில் வீடு கட்டுவதற்காக அனுமதி பெற்றுள்ள ஆவணத்தில் 280சதுர அடிக்கு வீடு கட்டுவதற்கு தான் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான் மற்ற இடங்களை பொறுத்து காலியாக இருக்கிறதா என்றால் இல்லை ஷெட் போடப்பட்டுள்ளது. வழக்கு சொத்தில் வீடு கட்டியுள்ள பகுதியை தவிர காலியிடம் 1514 சதுர அடி விடப்பட்டுள்ளது என்று பி.சாஆ.3 ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். அங்கு வீடு இருந்தது, அது பற்றி தெரியாது என்று சாட்சி மறுத்து கூறுகிறார். வழக்கு சொத்தில் என்னுடைய பங்கில் மட்டும் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றும் வாதியின் பங்கில் வீடு கட்டவில்லை என்றால் சரியல்ல, ஷெட் போட்டு வைத்துள்ளேன். வழக்கு சொசத்து வாதிக்கும் எனக்கும் கூட்டுபாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் ½ பாகம் கிடைக்கத்தக்கது என்றும் மீத பாகம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வழகக்கு சொத்தை முழுமையாக அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழகக்கு ஆவணங்களை

உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு வாதிக்கு சாதகமாக பாதிபாகத்திற்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.10.13 20:00:23 +0530

Sub Judge

Melur